1974 பிப்ரவரி 24

திறந்தவெளி திரை அரங்குகள்.

* வினா எண் 161—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திறந்தவெளி திரைப்பட அரங்கங்கள் கட்டிக் கொள்ள அரசு அனுமதி வழங்கி வருகின்றதா ?

(ஆ) ஆம், எனில், இது வரையில் எத்தனை பேருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ)—(ஆ) நான்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே எந்தெந்த மாவட்டங்களில், யார் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க இயலுமா ? அதைப் போலவே, இதற்கென நமது மாநில அரசு அவர்களுக்கு ஏதேனும் நிதி உதவி அல்லது மானியத் தொகை அளித்து வருகிறதா என்பதை அறிவிக்க இயலுமா ? அதைப் போலவே, மத்திய அரசும் இதற்காக ஏதேனும் உதவித் தொகை அளிக்க முன் வந்துள்ளதா என்பதை அறிய இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, வியாபார ரீதியில் இயங்கி வரும் திரை அரங்குக்கான அனுமதி செங்கல்பட்டு சோமங்கலம் கிராமத்தில் ''என்.கே. திறந்தவெளி திரையரங்கு'' என்ற பெயரிலுள்ள அரங்குக்கு அளிக்கப்பட்டு அது நடைபெற்று வருகிறது. மற்ற இரண்டு, கல்பாக்கம் அணுமின் நிலையத்திலும், ஆவடி சிறப்பு ஆயுதப் படை 2 ஆவது பிரிவிலும் அந்நிறுவனங்களுடைய ஊழியர்களுக்கு பயன்படுகிற திறந்தவெளி திரையரங்குகளாக உள்ளன. இப்பொழுது திரு. D. இராமானுஜம் என்பவருக்கு திருவான்மியூரில் திறந்த வெளி திரையரங்கம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இன்னும் வேலைகள் துவக்கப்படவில்லை என்று தெரிகிறது.

அதைப் போலவே, இன்னும் திருவொற்றியூர், சேலம், விருகம்பாக்கம் ஆகிய இடங்களிலும் திறந்த வெளி திரையரங்குகள் அமைக்க அனுமதி கோரி வந்த மனுக்கள் அரசின் பரிசிலனையில் இருக்கின்றன. இதைத் தவிர, இந்த அரங்குகள் அமைப்பதற்கு மாநில அரசோ, மத்திய அரசோ நிதி உதவியோ அல்லது வேறு உதவிகளோ செய்யவில்லையென்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 பிப்ரவரி 24

(முற்பகல் 9–30)

திரு. பொ. சிகாமணி: பேரவை தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள திரை அரங்குகளில் இந்தி ஆங்கிலம் போன்ற படங்கள் அதிகமாக திரையிடப்படுகின்றன. அப்படி திரையிடப் படும் திரை அரங்குகளுக்கு தமிழ் திரைப்படம் எடுப்பதற்காக தமிழக அரசு ஆணை எதுவும் இருக்கிறதா.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது திறந்தவெளி திரை அரங்குகளைப் பற்றிய கேள்வி. அது பற்றிய பிரச்னைகள் பொருத்தமாக இருக்கும். மொத்தமாக பதில் அளிப்பதற்கும் உதவியாக இருக்கும், அமைச்சர் அவர்கள் தயாராக வந்திருக்க முடியாது என்றாலும் அமைச்சர் விரும்பினால் பதில் சொல்ல லாம்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு தொடர்பற்ற கேள்வி என் றாலும் மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக் கொண்டதன் விளை வாக தமிழ் நாட்டு மக்களுக்கு இந்தச் செய்தி புலன் அளிக்கும் என்ற முறையில், தமிழ் நாட்டில் தமிழ் திரைப்படங்கள் திரை யிடப்படுவதற்கு போதிய திரை அரங்குகள் இல்லை என்ற அந்த நிலைமையை மனதில் எண்ணி வேறு மொழி திரைப்படங்களை ஆண்டு முழுவதும் திரையிட்டுக் கொண்டிருக்கிற அரங்குகள் கண்டிப்பாக தொடர்ந்து 12 வாரங்கள் ஒரு தமிழ் படத்தை திரையிட்டாக வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட் டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, தமிழ் நாட்டில் உள்ள மத்திய சிறைச்சாலையில் இவ்வாறு திறந்தவெளி அரங்கம் கட்டுவதற்கு அனுமதி கோரப்பட்டு அரசாங்கத் திற்கு விண்ணப்பங்கள் வந்துள்ளனவா? அப்படி எந்த மத்தியச் சிறைச் சாலையில் திறந்தவெளி அரங்கம் திறக்கப்பட்டு இயங்கி வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, பொது மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள திரை அரங்குகள் தான் இந்தத் துறைக்கு அனுமதி கோரி வருகின்றன. சிறைச்சாலைகளுக்குள்ளே அப்படி அமைக்கப்பட விரும்பினால் அது ஒரு வேளை சிறைத் துறையை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் சட்டத்துறை அமைச்சர் அவர்களுக்கு வந்திருக்கலாம். இந்தத் துறைக்கு அப்படிப்பட்ட செய்தி எதுவும் வரவில்லை. அப்படி வந்தால் அதுபற்றி வகனிக்கப்படும்.